


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 363 | 4 Pages | 29.7.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 363 | 4 பக்கங்கள் | 29.7.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**

**பற்றுக பற்று விடற்கு**

**விளக்கம்:** பற்றில்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும், உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப் பற்றைப் பற்ற வேண்டும்.

## அரியானா: விடுமுறையில் சொந்த ஊருக்கு வந்த சி.ஆர்.பி.எப். வீரர் சுட்டுக்கொலை

அரியானா மாநிலம் சோனிபத் மாவட்டத்தை சேர்ந்தவர் கிருஷ்ணன்(வயது 30). சி.ஆர்.பி.எப். வீரரான இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் ஒரு குழந்தை உள்ளது. இவர் விடுமுறையில் தனது குடும்பத்தினரை பார்க்க சொந்த ஊருக்கு வந்திருந்தார்.

இந்த நிலையில், இன்று அதிகாலை சி.ஆர்.பி.எப். வீரர் கிருஷ்ணனை அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் 2 பேர் துப்பாக்கியால் சுட்டனர். இதில் கிருஷ்ணன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். கொலையை செய்துவிட்டு இருவரும் பைக்கில் தப்பிச் சென்றதாக கூறப்படுகிறது.

இது குறித்துதகவலறிந்துவந்தபோலீசார், கிருஷ்ணனின்உடலைகைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். அண்மையில் கன்வார் யாத்திரையின்போது இளைஞர்கள் சிலருக்கும், கிருஷ்ணனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. அந்த இளைஞர்களுக்கு இந்த கொலையில் சம்பந்தம் உள்ளதா? என்பது குறித்து விசாரணை நடத்தி வருவதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

## வாரணாசி காசி விஸ்வநாதர் கோவிலில் ஆகஸ்ட் 11 முதல் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை



லக்னோ, ஜூலை 29

உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் கங்கை நதிக்கரை அருகே பிரசித்தி பெற்ற காசி விஸ்வநாதர் கோவில் அமைந்துள்ளது. வாரணாசியில் ஓடும் கங்கை நதி மிகவும் புனிதமானதாக கருதப்படுகிறது. காசி யாத்திரை மேற்கொள்வது பாவங்களை நீக்கி, புண்ணியத்தையும், மோட்சத்தையும் தரும் என்பது இந்துக்களின் நம்பிக்கையாக உள்ளது.

இந்நிலையில், இந்த புனித தளத்தை தூய்மையாகவும், பிளாஸ்டிக் இல்லாத சூழலை உருவாக்கும் முயற்சியாகவும், காசி விஸ்வநாதர் கோவில் நிர்வாகம் சார்பில் அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, வரும் ஆகஸ்ட் 11ந்தேதி முதல் காசி விஸ்வநாதர் கோவிலில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கோவில் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்வதற்காக பக்தர்கள் பிளாஸ்டிக் பாட்டில்களில் தண்ணீரை கொண்டு வர அனுமதி கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கோவிலுக்கு வரும் பக்தர்களிடம் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருவதாகவும், கோவிலின் புனிதத்தன்மை, தூய்மை மற்றும் பிளாஸ்டிக் இல்லாத சூழலை பராமரிக்க பக்தர்கள் உதவி செய்ய வேண்டும் என்றும் கோவில் நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து கோவிலின் தலைமை நிர்வாக அதிகாரி விஸ்வபூஷன் மிஸ்ரா கூறுகையில், "காசி விஸ்வநாதர் கோவில் ஒரு ஆன்மீக தளமாக மட்டுமின்றி, தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒரு முன்மாதிரியாகவும் திகழ வேண்டும். இந்த புனித தளத்தை மாசுபாடு இல்லாத இடமாக மாற்றவும், எதிர்கால சந்ததியினருக்காக இதை பாதுகாக்கவும் மேற்கொள்ளப்படும் முயற்சி இது" என்று தெரிவித்தார்.

## எத்தனை பாகிஸ்தான் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன? என கேட்கவேயில்லை: எதிர்க்கட்சிகளை கிழித்தெடுத்த ராஜ்நாத் சிங்

புதுடெல்லி, ஜூலை 2

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் பலியானதற்கு பதிலடியாக, ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்த பயங்கரவாத இலக்குகளை குறிவைத்து, இந்திய ராணுவம் தாக்குதலை நடத்தியது. 9 பயங்கரவாத உட்கட்டமைப்புகளை இலக்காக கொண்டு இந்திய ஆயுத படைகள் சார்பில் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும், இதுபற்றி விளக்கம் அளிக்கும்படி காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் ஆபரேசன் சிந்தூர் பற்றி விரிவாக விவாதம் நடத்தப்படும் என எதிர்க்கட்சிகளிடம் தெரிவிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு, மக்களவையில் மத்திய பாதுகாப்பு துறை மந்திரி ராஜ்நாத் சிங் இன்று ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கை பற்றி விளக்கம் அளித்து பேசினார். அப்போது அவர், விவாதத்திற்கு முழு ஒத்துழைப்பு தர மத்திய அரசு தயாராக உள்ளது என கூறினார். நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த தைரியம் நிறைந்த வீரர்களுக்கு என்னுடைய அஞ்சலியை செலுத்தி கொள்கிறேன் என கூறி தொடர்ந்து பேசினார். அப்போது அவர், இந்தியாவின் ஆபரேசன் சிந்தூர் பற்றி கேள்வி எழுப்பும் எதிர்க்கட்சியினர், சரியான கேள்விகளை கேட்கவில்லை என குற்றச்சாட்டாக கூறினார். பொது விவகாரங்கள் பற்றி அரசிடம் முக்கிய கேள்விகளை கேட்க வேண்டியது எதிர்க்கட்சிகளின் வேலை. நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள், நம்முடைய விமானங்களில் எத்தனை சுட்டு வீழ்த்தப்பட்டன? என கேட்கின்றனர். ஆனால், நம்முடைய படையினர் பாகிஸ்தானின் எத்தனை விமானங்களை சுட்டு வீழ்த்தினர் என ஒருபோதும் கேட்கவேயில்லை. நீங்கள் கேள்வி கேட்க விரும்பினால், இந்த ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கையில் நம்முடைய வீரர்கள் யாருக்கேனும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறதா? என கேளுங்கள். இதற்கு பதில், இல்லை என்பதே என்று சூடாக பதிலளித்து உள்ளார். நீங்கள் கேள்வி கேட்க விரும்பினால், நம்முடைய சகோதரிகள் மற்றும் மகள்களின் சிந்தூரரை பயங்கரவாதிகள் அழித்தனர். அந்த பயங்கரவாதிகளின் பின்புலத்தில் இருந்து செயல்பட்டவர்களை ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கை வழியாக, நம்முடைய ஆயுத படைகள் அழித்தனவா? என கேளுங்கள். இதற்கு பதில், ஆம் என்பதே. அனைத்து இலக்குகளும் எட்டப்பட்டு விட்டன என கூறியுள்ளார்

# கேரள கன்னியாஸ்திரிகள் சத்தீஸ்கரில் கைது: மு.க.ஸ்டாலின் கண்டனம்

சென்னை, ஜூலை 29

மத மாற்ற புகாரில் கேரளாவைச் சேர்ந்த இரு கன்னியாஸ்திரிகள் சத்தீஸ்கரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கு கண்டனம் தெரிவித்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவு வெளியிட்டுள்ளார். அந்த பதிவில் அவர் கூறியிருப்பதாவது; "சத்தீர்கரில் பஜ்ரங் தள் அமைப்பினரால் கேரள கன்னியாஸ்திரிகள் துன்புறுத்தல், பொய் குற்றச்சாட்டுக்கு ஆளாவது கவலையளிக்கிறது. வகுப்புவாதத்தின் ஆபத்தான வடிவத்தின்பிரதிபலிப்பு.சிறுபான்மையினரை பயமுறுத்தக் கூடாது. இந்தியாவில் சிறுபான்மையினர் கண்ணியத்திற்கும் சம உரிமைகளுக்கும் தகுதியானவர்கள்." இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்."

## 87வது பிறந்த நாளையொட்டி பா.ம.க. சார்பில் ரத்ததான முகாம்



திருப்பூர்: பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்களின் 87வது பிறந்த நாளையொட்டி, திருப்பூர் வடக்கு மாவட்ட பா.ம.க. அலுவலகத்தில் (அம்மன் நகர், பி.என். ரோடு) 25.07.2025 அன்று ரத்ததான முகாம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு மாவட்ட செயலாளர் கவின் ஜிம் ஜெயமுருகன் தலைமை வகித்தார். மாநில பொருளாளர் சையத் மன்சூர் உசேன் பங்கேற்று முகாமை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்டத் தலைவர் அவிநாசி சரவணன், மாநகரச் செயலாளர் ஜெய்சங்கர், மாவட்ட துணைத் தலைவர் மாது, தொழிற் சங்க செயலாளர் மயில்சாமி, இளைஞர் அணி செயலாளர் விக்னேஷ், மகளிர் அணி செயலாளர் நாகலட்சுமி, தலைவர் இளவரசி, மாநில செயற்குழு உறுப்பினர் பெரியார், வன்னியர் சங்க தலைவர் கண்ணன், செயலாளர் ராஜமாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டுவிழாவைசிறப்பித்தனர்.

ரத்ததான முகாம் பயனுள்ளதாகவும், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் அமைந்தது.

## ஆணவக்கொலை வழக்கில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்... கவினின் உறவினர்களிடம் உறுதியளித்த போலீசார்



தூத்துக்குடி, ஜூலை 29

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகே உள்ள ஆறுமுகமங்கலம் பகுதியை சேர்ந்த விவசாயி சந்திரசேகர் மகன் கவின்குமார். இவர் சென்னையில் உள்ள ஐ.டி. நிறுவனத்தில் பனியாற்றி வந்தார். இவரை சுர்ஜித் என்பவர் நெல்லையில் வைத்து அரிவாளால் சரமாரியாக வெட்டிக்கொன்றார். தனது அக்காவிடம் தொடர்ந்து பேசி வந்ததால், ஆத்திரமடைந்து சுர்ஜித், கவின் குமாரை வெட்டிக்கொலை செய்துள்ளார்.காதல்விவகாரத்தில் நடந்த இந்த ஆணவக்கொலை சம்பவம் நெல்லை மற்றும் தூத்துக்குடியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த கொலை சம்பவத்தில் இளம்பெண்ணின் பெற்றோரான சப்இன்ஸ்பெக்டர்களாக பணியாற்றி வரும் சரவணனும், கிருஷ்ணகுமாரிக்கும் தொடர்பு இருப்பதாக உயிரிழந்த கவின்குமாரின் குடும்பத்தினர் குற்றஞ்சாட்டினர். தொடர்ந்து, திருச்செந்தூர் தூத்துக்குடி சாலை முக்காணியில் கவினின் உறவினர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் எங்களுக்கு நியாயம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்தனர். இந்த போராட்டத்தில் உறவினர்கள், நண்பர்கள் என ஏராளமானவர்கள் ஈடுபட்டனர். இதனால், அப்பகுதியில் சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு வாகனங்கள் அணிவகுத்து நிற்றன. அந்த சாலை வழியாக வரும் வாகனங்களை மாற்றுப்பாதையில் திருப்பிவிடப்பட்டன.

இந்த நிலையில், போராட்டம் குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். தொடர்ந்து பொது மக்களிடம் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். இருப்பினும் போராட்டக்காரர்களுக்கும், போலீசாருக்கும் கடுமையான வாக்கு வாதம் ஏற்பட்டது.

தொடர்ந்து அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்திய போலீசார், ஆணவக் கொலை வழக்கில், கொலை செய்த சுர்ஜிதின் பெற்றோர் 24 மணி நேரத்தில் கைது செய்யப்படுவார்கள் என காவல் துறை உறுதிமொழி அளித்தனர். இதனை அடுத்து முக்காணி பகுதியில் கடந்த 3 மணி நேரமாக நடந்த சாலை மறியல் போராட்டம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

எனினும், எஸ்.ஐ.களாக உள்ள இருவரும் கைது செய்யப்பட்ட பிறகே கொல்லப்பட்ட கவினின் உடலைப் பெற்றுக்கொள்வோம் எனவும் கவின் குமாரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். சுர்ஜித் மற்றும் எஸ்.ஐ.கள் சரவணன், கிருஷ்ணகுமாரி மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சாலையில் கழன்று விழுந்த அரசு பேருந்தின் கதவு.. வாகன ஓட்டிகள் அதிர்ச்சி



கோவை, ஜூலை 29

பொள்ளாச்சியில் இருந்து இன்று காலை வால்பாறை நோக்கி அரசு பஸ் ஒன்று சென்றுகொண்டிருந்தது. அப்போது பொள்ளாச்சி வால்பாறை சாலையில் பேருந்தின் கதவு, திடீரென கழன்று சாலையில் விழுந்தது. கழவு விழுந்த நேரத்தில் சாலையோரம் இருந்த பொதுமக்களும், பின்னாடி வந்த வாகன ஓட்டிகளும் அதிர்ச்சி அடைந்து அங்கிருந்து ஓடினர். அதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் யாருக்கும் எந்தவித காயமும் இல்லை.

பேருந்தில் பொருத்தப்பட்டிருந்ததானியங்கி கதவு வேலை செய்யாத நிலையில், அதை சரிசெய்ய பல முறை பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துனர் அதிகாரிகளிடம் முறையிட்டும், பேருந்தை முறையாக பராமரிக்காத நிலையில், இன்று சாலையில் கதவு கழன்று விழும் அவலம் நடைபெற்றுள்ளது.

# அஜித் குமார் கொலை வழக்கு; தாய், தம்பியிடம் சிபிஐ விசாரணை

சிவகங்கை, ஜூலை 28

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள மடப்புரம் காளி கோவில் காவலாளி அஜித்குமாரை, நகை திருடியதாக அளிக்கப்பட்ட புகாரில் அழைத்து சென்ற தனிப்படை போலீசார், விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்ததில், அவர் உயிரிழந்தார். இந்த சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்தவிவகாரம்தமிழ்நாடுமுழுவதும்பேசுபொருளாகிய நிலையில், இந்த சம்பவத்தில் ஈடுபட்ட தனிப்படை காவலர்கள் 5 பேரும் கைது செய்யப்பட்டனர். அதே போல் அஜித்குமார் குடும்பத்தினரிடம் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மன்னிப்பு கேட்டதோடு, உரிய நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டார்.

விசாரணை அறிக்கையை சிபிஐ அதிகாரிகள் ஆகஸ்ட் 20 ஆம் தேதிக்குள் தாக்கல் செய்ய மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. சிபிஐ தரப்பில் விசாரணை அதிகாரியாக டெல்லியைச் சேர்ந்த மோகித் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தை கொலை வழக்காகப் பதிவு செய்து, சிபிஐ சிறப்பு குற்றப்பிரிவு டிஎஸ்பி மோகித்குமார் தலைமையிலான அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

கடந்த 14ம் தேதி விசாரணை துவங்கிய நிலையில், மடப்புரம் அஜித்குமார் கொலை வழக்கில் அவரது தாய், தம்பியை மதுரை ஆத்திக்குளத்தில் உள்ள சிபிஐ அலுவலகத்துக்கு இன்று இருவரையும் அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகிறது. 7 பேர் கொண்ட 2 குழு, இருவரையும் வாகனத்தில் சிபிஐ அலுவலகத்துக்கு அழைத்து சென்றது. 15வது நாள் விசாரணையை அஜித்குமார் வீட்டில் தொடங்கியுள்ளது சிபிஐ.



தினகனி



# விடுதலை சிறுத்தைகள் கட்சி மாபெரும் பொதுக்கூட்டம்



சேலம் ஒருங்கிணைந்த விடுதலை சிறுத்தைகளின் கட்சி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் கோட்டை மைதானம் பகுதியில் நடைபெற்றது.

இந்த பொதுக் கூட்டத்திற்கு தலைமை காஜா மைதீன் மொழியரசு மெய்யழகன் கருப்பையா தெய்வானை வீணா தமிழன் உள்ளிட்ட மாவட்ட செயலாளர் தலைமை வகித்தனர்

முன்னிலை ஜே மு இமயவர்மன் மண்டல செயலாளர், கு ஆர் முகம் மண்டல துணைச் செயலாளர் கே நாராயணன் மண்டல துணைச் செயலாளர் இந்த மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு தீர்மான விளக்க உரையை வே கனியமுதன் மாநில துணைப் பொதுச் செயலாளர் இரா நாவரசன் சேலம் கே ஜெயச்சந்திரன் மாநகர மாவட்ட செயலாளர் உள்ளிட்டோர் சிறப்புரை ஆற்றினர்.

மேலும் இந்த நிகழ்வில் ஒருங்கிணைந்த மாவட்ட செயலாளர்கள் பகுதி செயலாளர்கள் தொகுதி பொறுப்பாளர்கள் மண்டல பொறுப்பாளர்கள் தலைமை நிலைய பொறுப்பாளர்கள் மாநில பொறுப்பாளர்கள் உள்ளிட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் முன்னணி நிர்வாகிகள் உள்ளிட்ட சுமார் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மேலும் விடுதலை சிறுத்தைகள் கட்சி தமிழகத்தில் மிகப்பெரிய ஒரு ஆளுமை மிக்க கட்சியாக மாறி உள்ளது.

மக்கள் விரும்பும் தலைவராகவும் மக்களைப் பற்றி நேசித்து மக்களின் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் ஒரு தலைவராகவும் உள்ளார் எழுச்சி தமிழர் தொல் திருமாவளவன் மேலும் பாஜகவின் பாசிசம் இங்கு எடுபடாது தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மதசார்பின்மை காப்போம் மக்கள் எழுச்சி பேரணி நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து திண்ணை பிரச்சாரம் உள்ளிட்டவற்றை மேற்கொள்ளதாகவும் தெரிவித்தனர்.

# கடலாடி சமத்துவபுரத்தில் மாவட்ட ஒன்றிய பொறுப்பாளர்கள் கூட்டம்




கடலாடி ஜூலை 29

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி சமத்துவ புரத்தில் தென்மண்டல தலைவர் சண்முகசுந்தரம் தலைமையில் கோவில் பூசாரிகள் நலச் சங்க மாவட்ட ஒன்றிய பொறுப் பாளர்கள் கூட்டம் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்த பூசாரிகளுக்கு ஓய்வூதியம் கிடைக்க விரைந்து தேர்வுக்குழு கூட்டத்தை நடத்த சென்னை ஆணையர் நடவடிக்கை எடுக்க மாநில தலைவர் வலியுறுத்த வேண்டும் என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# மனைவி அளித்த புகாரில் பல பெண்களிடம் தொடர்பில் இருந்த தலைமை காவலர் கைது



ஒட்டன்சத்திரம் ஜூலை 29

திண்டுக்கல் மாவட்டம் பழனி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருபவர் பார்த்திபன் இவர் திண்டுக்கல் அருகே உள்ள சீலப்பாடி மகாலட்சுமி நகரை சேர்ந்தவர் (35). இவர் கடந்த வருடம் ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது திண்டுக்கல் மேற்கு வட்டம் முத்தனம்பட்டி அருகே உள்ள இடையபட்டியை சேர்ந்த வினோதினி (20) என்பருடன் திருமணம் நடைபெற்றுள்ளது. திருமணம் ஆன ஒரு வாரத்திற்குள் பார்த்திபன் நடவடிக்கை சரியில்லாததால் வினோதினி கணவனின் பார்த்திபன் செயல்பாட்டை கண்காணித்து வந்துள்ளார்

அதில் பார்த்திபன் அடிக்கடி வாட்ஸ் ஆப்பில் பல பெண்களிடம் பேசுவது ஆபாச புகைப்படங்களை செல்போனில் வைத்திருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்து இது குறித்து கணவனின் குடும்பத்தாருக்கு ஆதாரங்களுடன் கூறிய போது இரு குடும்பத்தாருக்கும் இடையே தகராறு ஏற்பட்டதாக தெரியவருகிறது. இந்த நிலையில் கணவன் குடும்பத்தார் வினோதினியை வீட்டை விட்டு விரட்டி வெளியேற்றியதாக தெரியவருகிறது.

இது குறித்து வினோதினி திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்ததின் பேரில் பார்த்திபன் அவரின் தாய் கண்ணம்மாள் மற்றும் 10 பேர் மீது ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் பேபி தலைமையிலான காவல் துறையினர் பார்த்திபனை கைது செய்து திண்டுக்கல் மத்திய சிறையில் அடைத்தனர்.

இதற்கிடையில் பார்த்திபன் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு கன்னிவாடி காவல் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் அடிதடி வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்டு முன் ஜாமின் பெற்று கன்னிவாடி காவல் நிலையத்தில் தினசரி கையெழுத்திட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்த சம்பவம் காவல் துறை வட்டாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# நீலகிரி மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



ஊட்டி, ஜூலை 29

நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா, முதியோர், விதவை, கல்வி உதவி தொகை, வங்கி கடன், சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 132 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட கலெக்டர், பணியிடத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு பெற்ற, ஆறுமுகம் என்பவரின் வாரிசுதாரரான ஈஸ்வரி என்பவருக்கு தொழிலாளர் நலத்துறை சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான ஆணையினையும், தமிழ்நாடு அமைப்புச்சாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற, பெண் ஆட்டோ ஓட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்குவதை ஊக்குவிக்கவும், அவர்களுக்கான சுயவேலைவாய்ப்பினை உருவாக்கவும்,

வருமானம் ஈட்டும் திறன் மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கில் 4 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு ரூ.4 இலட்சம் மதிப்பில் (தலா ரூ.1 இலட்சம் மானியம்) புதிய ஆட்டோ ரிக்ஷா வாகனத்திற்கான சாவிகள் மற்றும் நிர்வாக அனுமதி ஆணைகளையும் வழங்கினார்.

மேலும், மாவட்ட கலெக்டர், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கு, ரூ.19 இலட்சம் மதிப்பில் டார்ச், கையுறை, லைப் ஜாக்கெட், முதலுதவி பெட்டி, பாதுகாப்பு தலைக் கவசம், இரப்பர் டியுப் உள்ளிட்ட 34 வகையான பேரிடர் மேலாண்மை உபகரணங்களை தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளின் துறை நிலைய அலுவலர் (போக்குவரத்து) ஸ்ரீதரிடம் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், சமூக பாதுகாப்பு திட்டம் (தனித் துணை ஆட்சியர்) ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் கண்ணன் (கணக்குகள்), பழனிச்சாமி (நிலம்), மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம் ) லெனின் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# கோவை மண்டல மின்சார பகிர்மான கழகத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள தலைமை பொறியாளருக்கு வாழ்த்து



கோவை,ஜூலை 29

கோவை மண்டல மின்சார பகிர்மான கழகத்தில் தலைமை பொறியாளராக புதிதாக பொறுப்பேற்றுள்ள பி.சுரேஷ்குமார் அவர்களுக்கு கோவை வடக்கு மாவட்டம் ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் வேலுச்சாமி, தமிழ்நாடு மின் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் கு.சந்திரன், தி.கிருஷ்ணன், முன்னாள் காரமடை இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.ஆர்.பத்ரி ஆகியோர் பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.


# மாநகராட்சி வரிகளை குறைக்க வலியுறுத்தி அதிமுக உறுப்பினர்கள் ஈரோடு மாநகராட்சி கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு



ஈரோடு, ஜூலை 29

ஈரோடு மாநகராட்சி கூட்டம் மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது இதில் ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட 60 வார்டுகளை சேர்ந்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் இதில் ஈரோடு மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவராக தங்கமுத்து கலந்து கொண்டு ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வரிகளை குறைக்க வேண்டும் என்று 60 வார்டு உறுப்பினர்களும் கோரிக்கை வைத்தும் எவ்விதமான நடவடிக்கை எடுக்கவில்லை மேலும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கொண்டு வந்த பெரும்பள்ளம் ஓடை திட்டத்தை இன்று வரை முடிக்கவில்லை ஊராட்சி கோட்டை குடிநீர் திட்டம் முழுமையாக செயல்படுத்தாமல் பொது மக்களுக்கு மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள்.மாநகராட்சி பூங்காக்களில் பராமரிக்க ஆட்களை நியமிக்காமல் மிகவும் புதர் மண்டி போல் காட்சியளிக்கிறது இதனை உடனடியாக சரி செய்ய வேண்டும் என வலியுறுத்தி ஈரோடு மாநகராட்சிக்கு உள்ள அதிமுக உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் தங்கமுத்து மற்றும் சூரம்பட்டி ஜெகதீசன்,தங்கவேலு உட்பட வெளி நடப்பில் ஈடுபட்டனர். இதனால் மாநகராட்சி கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

# கம்பன் காட்டும் மிதவாதம் குழப்பம் விளைவிக்கிறது கம்பன் கழகத்தின் 50 ஆம் ஆண்டு பொன் பெருவிழா



கம்பன் கழக தலைவர் எஸ்.ராமச்சந்திரன், செயலாளர் பாரதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை ஜூலை 29

புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 50 ஆம் ஆண்டு பொன் பெருவிழாவில் "கம்பன் காட்டும் மிதவாதம் குழப்பம் விளைவிக்கிறது" என்னும் தலைப்பில் நடைபெற்றது. விழாவில் ஆன்மீக சொற்பொழிவாளர் சுகி.சிவம் பேசியதாவது:

கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவி பாடும் என்பது உலகறிந்த விஷயம் என்பதில் மாற்று கருத்து இல்லை.

கம்பராமாயண் என்னும் மிகப்பெரும் காப்பியத்தில் கவிதை இலக்கியம் ஆகியவற்றை மிக அருமையாக கையாண்டிருப்பார். இருக்கும் எந்த கவிஞராலும், சொற்பொழிவாளர் ஆனாலும், இலக்கியவாதி ஆனாலும், பேச்சாளர்கள் ஆனாலும் கம்பராமாயணத்தில் உள்ள வரிகளை கோடிட்டு காட்டாமல் பேசுவது அவ்வளவு எளிதல்ல. அத்தனை எளிமையாகவும் புரிதலோடும் கூறி இருப்பார். இது நம் தமிழ் மொழிக்கு உரிய பெருமையான விஷயம். இவ்வாறு பேசினார். மேலும் இந்நிகழ்ச்சியில் கம்பன் கழக தலைவர் எஸ்.ராமச்சந்திரன், செயலாளர் பாரதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# காஞ்சிபுரம் ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில், கருவூலம் மற்றும் கணக்குத் துறை சார்பில் சென்னை மண்டல அளவிலான தணிக்கை பத்திகள் மீதான ஆய்வு



காஞ்சிபுரம், ஜூலை 29

சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட கருவூலம் மற்றும் கணக்குத்துறை அலுவலகங்களில் மாநில கணக்காயரின் ஆண்டாய்வில் குறிப்பிடப்பட்டுள்ள தணிக்கைகள் மீதான குறைகளைவு கூட்டமர்வு இன்று கருவூலம் மற்றும் கணக்குத்துறை இயக்குநர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில கணக்காயரின் ஆண்டாய்வில் குறிப்பிடப்பட்டுள்ள பத்திகளுக்கு நிலுவை பத்திகள் குறைகளைவு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் இதுதொடர்பாக துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு முழுமையான பதிலை உடனே சமர்ப்பிக்குமாறு கருவூல அலுவலர்கள் மற்றும் உதவி கருவூல அலுவலர்களுக்கு கருவூலம் மற்றும் கணக்குத்துறை இயக்குநர் அவர்கள் அறிவுரை வழங்கினார். இக்கூட்டத்தில் மாநில கணக்காயரின் ஆண்டாய்வில் குறிப்பிடப்பட்டிருந்த நிலுவை பத்திகளில் 87% தீர்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் மாநில கணக்காய் அலுவலக முதுநிலை கணக்கு அலுவர்கள் திரு மல்லேஷ்வரன் மற்றும் அலுவலர் திருமதி விஜயலட்சுமி சங்கர் ஆகியோருக்கு கருவூலம் மற்றும் கணக்குத்துறை சார்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மாநில கணக்காயர் அலுவலகம் மற்றும் கருவூல கணக்கு இயக்ககம் ஒருங்கிணைந்து பிப்ரவரி 2023 முதல் தற்பொழுது திருச்சி, மதுரை, திருநெல்வேலி வேலூர் கோயம்புத்தூர் மற்றும் சென்னை மண்டலங்களில் வெற்றிகரமாக கூட்டமர்வு நடத்தி 6 பெரும்பான்மையான பத்திகளுக்கு தீர்வு காணப்பட்டது.

இவ்ஆய்வு கூட்டத்தில் கருவூலம் மற்றும் கணக்குத்துறை இயக்குநரின் நேர்முக உதவியாளர் (கருவூல கட்டுப்பாடு) ட இராஜகோபாலன், கூடுதல் இயக்குநர் (திட்டங்கள்) ப.சந்திரன், முதுநிலை கணக்கு அலுவலர்கள் மல்லேஷ்வரன், விஜயலட்சுமி சங்கர், காஞ்சிபுரம் மாவட்ட கருவூல அலுவலர், திரு அ.அருள்குமார், சென்னை மாநில கணக்காயர் அலுவலர்கள் மற்றும் சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட திருவள்ளூர், செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், சென்னை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 6 மாவட்டங்களை சேர்ந்த கருவூல அலுவலர்கள், உதவி கருவூல அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் மாநகராட்சி பத்தாவது வார்டில் புதிய தார் சாலை மறு தார்சாலை அமைக்கும் பணி பூமி பூஜை




திருப்பூர் மாநகராட்சி பத்தாவது வார்டில் புதிய தார் சாலை மறு தார்சாலை அமைக்கும் பணி பூமி பூஜை போடப்பட்டது

திருப்பூர் மாநகராட்சி 10வது வார்டுக்கு உட்பட்ட ஆத்துப்பாளையம் சூர்யா நகர் மற்றும் ஆத்து ப்பா ளையத்தில் இருந்து வெங்கமேடு செல்லும் வழியில் உள்ள எஸ் பி கே கார்டனின் எதிரில் உள்ள மண் சாலை பகுதிகளில் மாநில நிதிக்குழு 202526 திட்டத்தின் கீழ் சிப்பம் எண்.02 ன் கீழ் ரூ. 71.24 லட்சம் மதிப்பீட்டில் புதிய தார் தளம் மற்றும் மறு தார் தளம் அமைக்க பூமி பூஜை போடப்பட்டது. இந்நிகழ்ச்சியில்மண்டல தலைவர் திருமதி உமா மகேஸ்வரி சிட்டி வெங்கடாசலம் பகுதி கழக செயலாளர் கொ.ராமதாஸ் மற்றும் வர்த்தக அணி அமைப்பாளர் எம்.எஸ்.மணி மற்றும் 10வது வார்டு மாமன்ற உறுப்பினர்திருமதி பிரேமலதா கோட்டா பாலு அவர்களும் அவரது கணவரும் மாநகர அயலக அணி அமைப்பாளரும் முன்னாள் மாமன்ற உறுப்பினரும் ஆகிய கோட்டா பாலு அவர்களும் 10 வது வார்டு செயலாளர் சசிகுமார் , பகுதி கழக துணை செயலாளர்மணிமாறன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்பார்த்திபன், காயத்ரி நகர் பாலு,

மனோகரன், ரெட்டி,ரகுபதி,அய்யாச்சாமி, ராஜசேகர், செல்வம், நாகராஜ், மீனவரணி ஆறுச்சாமி, ரமேஷ், தண்டபாணி மற்றும் கழக நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# பாலசமுத்திரம் தேர்வுநிலை பேரூராட்சியில் புகைப்படக் கண்காட்சி



திண்டுக்கல், ஜூலை 29

தமிழக அரசால், செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி மாவட்டம் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, திண்டுக்கல் மாவட்டம். பாலசமுத்திரம் தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின் தமிழக மக்களின் வாழ்வில் புது ஒளியை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில், தமிழக அரசு சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களான மக்களைத் தேடி மருத்துவ திட்டம், காலை உணவுத்திட்டம், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம், அரசு நகரப் பேருந்துகளில் மகளிர் இலவச பயணம் மேற்கொள்ள விடியல் பயணத் திட்டம், அரசு பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி(தமிழ்வழி கல்வி) படித்த மாணவர்கள் உயர்கல்வி படித்தால் அவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள், ஏழை எளியோர் வாழும் இடத்திலேயே சிறப்பு மருத்துவச் சேவை அளிக்கும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், உயர்த்தப்பட்ட மகப்பேறு நிதியுதவி திட்டம், கர்ப்பிணி பெண்களுக்கான பராமரிப்பு நிதியுதவி திட்டம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் புகைப்படங்கள் வைக்கப்பட்டன.

மேலும், திண்டுக்கல் மாவட்டத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆகியோர் மாவட்டத்தின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப்பணிகள் உள்ளிட்டவைகள் தொடர்பாக புகைப்படங்கள் இடம் பெற்று, பொதுமக்கள் பார்த்து எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் இக்கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# பல்வேறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆகஸ்ட் 22ல் முற்றுகை: டிட்டோ ஜாக் மற்றும் ஜாக்டோ ஜியோ அறிவிப்பு



தென்காசி ஜூலை 29

தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு சார்பில் இயக்க பயிற்சி முகாமானது தென்காசி மாவட்டம் குற்றாலம் பகுதியில் நடைபெற்றது.

இதில் ஏராளமான ஆசிரியர்கள் பங்கேற்ற நிலையில், இந்த இயக்க பயிற்சி முகாமில் சிறப்பு விருந்தினராக டிட்டோஜாக் மற்றும் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் மயில் பங்கேற்று தற்போதைய தமிழக அரசால் ஆசிரியர்கள் படும் பல்வேறு இன்னல்கள் குறித்து ஆசிரியர்கள் மத்தியில் பேசினார்,

இந்த முகாமின் போது பல்வேறு முக்கிய தீர்மானங்கள் தமிழக அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட்டன.

தொடர்ந்து, செய்தியாளர்களை சந்தித்த டிட்டோஜாக் மற்றும் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் மயில் பேசும் போது : பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும், மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையாக மாநில அரசு ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தாங்கள் தொடர்போராட்டம் நடத்தி வரும் நிலையில், அதனை கண்டு கொள்ளாமல் தமிழக அரசு அலட்சியம் காட்டி வருவதாகவும், தொடர்ந்து இது போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டால் வருகின்ற ஆகஸ்ட் மாதம் 22 ஆம் தேதி தலைமைச் செயலகம் முற்றுகை போராட்டம் நடத்தப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்தார். மேலும், பழைய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்துவது தொடர்பாக தமிழக அரசு 3 நபர்கள் கொண்ட கமிஷனை அமைத்துள்ளது வெறும் நாடகம் எனவும், காலம் தாழ்த்துவதற்காகவே இது போன்ற செயல்பாடுகளில் தமிழக அரசு ஈடுபட்டு வரும் நிலையில் உடனடியாக தமிழக அரசு தேர்தல் வாக்குறுதியில் கூறியது போல பழைய பென்ஷன் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என கூறினார்.

# மானகிரியில் உள்ள செட்டிநாடு பப்ளிக் பள்ளியில் சிபிஎஸ்சி செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள்




காரைக்குடி, ஜூலை 29

காரைக்குடி அருகே மானகிரியில் உள்ள செட்டிநாடு பப்ளிக் பள்ளியில் 2025 2026 ஆண்டிற்கான சிபிஎஸ்சி செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் 28.7.2025 ,29.7.2025 30.7.2025 ஆகிய மூன்று நாட்களும் போட்டிகள் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் துவக்க விழா 28.7.2025 (திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு நடைபெற்றது . நிகழ்ச்சியில் பள்ளியின் முதல்வர் உஷா குமாரி அனைவரையும் வரவேற்றார். பள்ளியின் தாளாளர் குமரேசன் தலைமை தாங்கினார், சிறப்பு விருந்தினர் ஸ்டீபன் பாலசாமி தமிழ்நாடு சதுரங்க கழக பொதுசெயலாளர் சிறப்புரையாற்றி போட்டியை துவங்கி வைத்தான், பள்ளியின் துணை சேர்மன் அருன் வாழ்த்துரை வழங்கினார், பிரேமசித்ரா நன்றியுரையாற்றினார்

# கரூர் மாவட்ட கலெக்டர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



கரூர், ஜூலை 29

கரூர் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது,

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, வங்கிக் கடன்கள், பட்டா மாறுதல், சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மாற்றுத்திறனாளி களுக்கான உதவித் தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 464 மனுக்கள் வரப்பெற்றன.

இதில், மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரைதளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட 45 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தெரிவித்தார்.

இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பாக காதொலி கருவிகள், செயற்கைகால் என 10 பயனாளிகளுக்கு ரூ. 93,165 மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளையும், தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் 8 வட்டாரங்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகளுக்கு வீடு, வீடாக சென்று தரவுகள் சேகரிப்பதற்காக கையடக்க படிக்கணினிகளை 14 சமூக வழிநடத்துநர் மற்றும் சமூக மறுவாழ்வு பணியாளர்களிடமும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.18000/ மதிப்பிலான திரவ எரிவாயு சலவைப்பெட்டிகள் மற்றும் சீர்மரபினர் நல வாரியம் அடையாள அட்டைகளையும் மற்றும் மனு அளித்து தீர்வு கானப்பட்ட நாகலட்சுமி என்பவர்க்கு முதலமைச்சர் மருத்துவ காப்பீட்டு அட்டையை மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் வழங்கினார்.

# அந்தியூர், பர்கூர் ஊராட்சி, கத்திரிமலை பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகள்: மாவட்ட கலெக்டர் ஆய்வு



ஈரோடு மாவட்டம், அந்தியூர், பர்கூர் ஊராட்சி, கத்திரிமலை பகுதியில், ஈரோடு மாவட்ட கலெக்டர் ச.கந்தசாமி மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

கத்திரிமலை பகுதியில் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 25 வீடுகள் மற்றும் தாட்கோ திட்டத்தில் பயனாளிகளுக்கு வீடுகள் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு, வீடுகள் கட்டப்பட்டு வரும் பயனாளிகள் விபரம், வீடுகளின் தரம் மற்றும் அறைகள் விபரம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, வனத்துறை மற்றும் தாட்கோ மூலம் பழங்குடி மக்களுக்கு வழங்கப்பட்ட மாவு அரைக்கும் இயந்திரங்களை பார்வையிட்டு, இயந்திரத்தின் பயன்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து, கத்திரிமலையில் செயல்பட்டு வரும் ஆதிதிராவிடர் நலப்பள்ளியில் பயிலும் 22 மாணவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் பள்ளியில் செயல்பட்டு வரும் நூலகத்திற்கு மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்காக புத்தகங்களை வழங்கினார். மேலும் பர்கூர் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் கத்திரிமலையில் உள்ள மலை கிராம மக்களுக்கு புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தொலை மருத்துவம் மூலம் மருத்துவ சிகிச்சை அளிக்கும் இயந்திரக் கருவிகளை பார்வையிட்டார். தொடர்ந்து, பழங்குடியினர் நல உண்டு உறைவிடப் பள்ளியின் சமையல்கூடம், விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களின் விபரம், மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் சுவை, உணவு பட்டியல் விபரம், அடிப்படை வசதிகள், உணவுப்பொருட்களின் இருப்பு மற்றும் விடுதியில் பாதுகாப்பு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் ஊட்டச்சத்து வேளாண் இயக்கத்தின் கீழ் பயனாளிகளுக்கு காய்கறி மற்றும் பயிறு வகை விதைத் தொகுப்புகளை வழங்கினார்.

மேலும், கத்திரிமலை பகுதியில் கூட்டம் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சி துறை மற்றும் காவல்துறை உள்ளிட்ட அனைத்து துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் விடுபட்ட பயனாளிகள் மகளிர் உரிமைத்தொகை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

# சிறு, குறு விவசாயிகளுக்கு மின்சாரம் மூலம் இயங்கும் புல் நறுக்கும் கருவிகள் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கும் திட்டம்: கலெக்டர் தகவல்

தீவன விரயத்தைக் குறைப்பதற்காகவும், கால்நடைகளின் செரிமானத் தன்மையை அதிகரிக்கவும், உற்பத்தித் திறனைப் பெருக்கவும், ஈரோடு மாவட்டத்தில் 200 சிறு குறு விவசாயிகளுக்கு ரூ.32000/ மதிப்புள்ள மின்சாரம் மூலம் இயங்கும் புல் நறுக்கும் கருவிகள் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படவுள்ளன.

குறைந்தது 0.25 ஏக்கர் நிலப்பரப்பில் மின்சார வசதியுடன், தீவனம் பயிரிட்டுள்ள, இரண்டு பசு அல்லது எருமைகளுக்கு உரிமையாளராக இருக்கும் சிறு குறு விவசாயிகள் இத்திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.

பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு இதரதகுதிகள் இருப்பின் இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

கடந்த பத்து ஆண்டுகளில் அரசின் இதுபோன்ற திட்டத்தில் பயனடைந்தவர்கள் இத்திட்டத்தில் பயனடைய இயலாது.

மின்சாரம் மூலம் இயங்கும் புல் நறுக்கும் கருவியின் விலையில் 50 விழுக்காடு தொகையினை தங்களின் பங்களிப்பாக செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தில் பயனடைய விருப்பமுள்ளவர்கள் சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை நகல், சிறு குறு விவசாயி சான்றிதழுடன் அருகிலுள்ள கால்நடை மருந்தகத்தை அணுகி விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# ஓசூர் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட பாஜக தலைவர் வனப்பகுதியில் 4கிலோ மீட்டர் பைல்பட்டி முதல் உனுஷ்நல்லி சாலை வரை சாலை அமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை



ஓசூர், ஜூலை, 29

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம் பைல்பட்டி முதல் உனுஷ்நல்லி சாலை வரை சுமார் 4 கிலோ மீட்டர் அளவுக்கு வனப்பகுதியில் சாலை அமைக்க மத்திய அரசுக்கு பாரதிய ஜனதா கட்சி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தலைவர் வி.நாராயணன் சாலை அமைக்க பரிந்துரை செய்தனர், உரிகம்,கஸ்தூரி, பைல்பட்டி, மஞ்சுகாணப்பள்ளி, நந்திமங்கலம்,மற்றும் சில கிராம பொதுமக்கள் பாஜக மாவட்டத் தலைவர்க்கு கோரிக்கை வைத்தனர் வி.நாராயணன் அவர்கள் இந்த கிராமங்களுக்கு நேரில் சென்று கிராம மக்களை தொடர்பு கொண்டு சாலை ஆய்வு செய்தனர். அப்பொழுது பொதுமக்கள் அவர்களிடம் இந்தியா சுதந்திரம் பெற்று 77ஆண்டுகள் ஆனாலும் இந்த கிராமங்களுக்கு இதுவரை அரசு சாலை அமைக்க முன்வரவில்லை பல நாட்கள் அரசு அதிகாரிகள் எங்களிடம் நேரில் வந்து குறைகளை கேட்டு அறிந்தனர் எங்கள் குறைகளை அவர்களுக்கு கூறியும்அதில் மிக முக்கியமானது சாலை அமைத்து தர வேண்டும் என்று பைல்பட்டி முதல் உனுஷ்நல்லி வரை வனப்பகுதியில் சாலை அமைக்க கூறியும் ஆனால் இதுவரை அரசு அதிகாரிகள் எங்கள் கிராமங்களில் இருந்து உனுஷ்நல்லி சாலை வரை சாலை அமைத்து தரவில்லை எங்களுக்கு எந்த ஒரு பொருட்கள் வாங்க வேண்டும் என்றாலும் மற்றும் மருத்துவமனை சென்றாலும் உனஷ்நல்லிக்கு செல்ல வேண்டும். ஏனெனில் எங்களுக்கு சாலை வசதி இல்லாமல் இந்த கிராம மக்கள் பல ஆண்டுகளாக அவதிப்பட்டு வருகிறோம் ஆதலால் நாங்கள் பாஜக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தலைவர் வி.நாராயணன் அவர்களிடம் இந்த கிராம பொதுமக்கள் முறையிட்டோம் எங்கள் கிராமத்திலிருந்து உனுஷ்நல்லிக்கு செல்லும் சாலை வரை வனப் பகுதியில் சாலை அமைத்து தர வேண்டும் என்று மாவட்ட தலைவர் அவர்கள் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து இந்த சாலையை அமைத்து தருவோம் என்று கூறினார்.

அப்பொழுது பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தவர்கள் ஒன்றிய தலைவர்கள் கெலமங்கலம் மேற்கு ஒன்றிய தலைவர் ராஜேஷ்குமார், மார்கண்டேயன்,சிவா, மூர்த்தி,மாவட்டத் துணைத் தலைவர் பாஸ்கர்ரெட்டி,மற்றும் குமார்,நஞ்சப்பா, உமேஷ்,மஞ்சுநாத், மற்றும் பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் எனப் பலர் உடன் இருந்தனர்.

# திருவில்லிப்புத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயில் ஆடிப்பூரத் தேர்த்திருவிழா



விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூரில் அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில் ஆடிப்பூரத் தேர்த்திருவிழாவை இன்று (28.07.2025) மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ. சுகபுத்ரா, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.தெ.கண்ணன்,த.கா.ப.,அவர்கள், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.ஆர். ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.தங்கப்பாண்டியன் அவர்கள், சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் அவர்கள் ஆகியோர் திருத்தேரோட்டத்தினை வடம் பிடித்து இழுத்து துவக்கி வைத்தனர்.

அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோவிலில் திருஆடி பூரத் திருத்தேரோட்டம் ஆண்டு தோறும் ஆடிமாதம் ஆண்டாள் பிறந்த நாளை கொண்டாடும் வகையில் ஆடிப்பூரத் திருவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக ஆடிப்பூரத் தேரோட்ட விழா நடைபெற்றது. இந்த விழாவை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் திருத்தேரின் வடம்பிடித்து தேரோட்டத்தினை துவக்கி வைத்தார்.

திருத்தேரானது கோவிலை சுற்றியுள்ள நான்கு ரத வீதிகளிலும் கோவிந்தா, கோபாலா என்ற கோஷத்துடன் வீதி உலா வந்தது.

ஆடிப்பூரத் தேரோட்ட விழாவிற்கான முன்னேற்பாடுகளை மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் சிறப்பான முறையில் ஏற்பாடுகளை செய்திருந்தது. காவல்துறையின் மூலம் தேரோட்ட நிகழ்ச்சியில் பங்கேற்கும் பொதுமக்களுக்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. குற்றங்களைத்தடுக்க ஆங்காங்கே கண்காணிப்பு கேமிரா

பொருத்தி கண்காணிக்கப்பட்டது. கூட்ட நெரிசலை தவிர்க்க போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தி மாற்றுப்பாதை ஏற்படுத்தப்பட்டிருந்தது. வருகின்ற பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்குத் தேவையான குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதிகள் நகராட்சி நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

# ஸ்ரீ அங்காள ஈஸ்வரிபெரியாயி அம்மன் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் விழா





செங்குன்றம் அருகே பூச்சிஅத்திப்பேடு கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ அங்காள ஈஸ்வரி மற்றும் பெரியாயி அம்மன் ஆலயத்தில் புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா ஆலய ஸ்தாபகர் வெங்கட்ராமன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் விக்னேஷ்வரபூஜை, சங்கல்பம்,கணபதிஹோமம், சுதர்சனம் ஹோமம்,தன லட்சுமி பூஜை, கோபூஜை,பூர்ணாஹீதி மற்றும் புண்யா கவாசனம், வாஸ்துசாந்தி, பிரவேசபலி, வேத பாராயணம்,யாகசாலைபூஜைகள் உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் மற்றும் ஹோமங்கள் நடைபெற்றது.

பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று ஆன்மீக ஆசான்கள் திருக்கரங்களால் ஆலய விமானம், மூலவர்கள் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷே கம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது

பின்னர் புனிதநீரை பக்தர்கள் மீது தெளித்தனர். தணைத்தொடர்ந்து அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு வண்ண மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூப தீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.

இவ்விழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், ஆன்மீக ஆசான்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்து கொண்டுசுவாமி தரிசனம் செய்தனர்.

மேலும் அம்மனுக்கு கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை மற்றும் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது.இவ்விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

# சேலம் ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மாணவி 20வது இளையவர் (junior) தேசிய soft tennis சாம்பியன்ஷிப்பில் மாபெரும் சாதனை



"சாதனையே வாழ்வின் எல்லை சாதனை செய்யாமல் இருந்ததும் இல்லை" என்று சேலம் மாவட்டம் நரசோதிப்பட்டியில் அமைந்துள்ள ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மாணவி ரிஷிகா.D இந்திய அமெச்சூர் சாஃப்ட் டென்னிஸ் கூட்டமைப்பு ஜூன் 26 முதல்ஜூன்30 வரைஅரியானாவில்நடத்திய 20வதுஜூனியர் தேசிய சாஃப்ட் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப்பதக்கம் மற்றும் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பரிசுத் தொகையை வென்று மாபெரும் சாதனை படைத்துள்ளார். மேலும் பள்ளியின் துணைப்பொது மேலாளர்வெங்கடகிருஷ்ணா ரெட்டி அவர்களும், மேல் நிலை பள்ளியின் முதல்வர் ஶ்ரீகாந்த் அவர்களும், உயர் நிலை பள்ளியின் முதல்வர் மாலதிராஜா அவர்களும், மண்டல கல்வி நிலைய தலைவர் செல்லையா அவர்களும், துணை முதல்வர் ஸ்ரீமதி ஸ்ரீனிவாசன், பொறுப்பாளர்களும் மற்றும் ஆசிரியர்களும் பரிசு பெற்ற மாணவியை வாழ்த்தி பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
29.7.2025

# திருப்பூர் மாவட்டம் தாராபுரம் பகுதியில் மாற்றுத்திறனாளி படுகொலைக்கு நீதி கிடைக்க கோரிக்கை




திருப்பூர்மாவட்டம்தாராபுரம் பகுதியைச் சேர்ந்த முருகானந்தம் என்ற வழக்குரைஞர் மாற்றுத் திறனாளி. உடலில் 70 சதவிகிதம் பாதிப்பு உள்ளவர். கடந்த 2012 ஆண்டு வழக்குரைஞர் ஆக பதிவு செய்து உள்ளார். இவரின்சித்தப்பா தண்டபாணி என்பவருக்கும் இவர் குடும்பத்திற்கும் சொத்து தொடர்பாக பிரச்சனைஉண்டு.முருகானந்தம் தந்தை அவரின் தம்பியால் ஏற்கனவே படுகொலை செய்யப் பட்டுள்ளார். தொடர்ந்து சட்டத்தின் துணை கொண்டு சொத்து தொடர்பாக போராடி வந்துள்ளார். மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய உரிமை பெற்றுத் தர பல பொதுநல வழக்குகளைதாக்கல் செய்து அதில் தானே ஆஜராகி வாதாடுவது அவரின் சிறப்பாகும். மேற்படி அவரின் சித்தப்பாவின்தூண்டுதலில் ஒரு பொய் வழக்கில் கோயமுத்தூர் சிறையில் அவர் அடைக்கப்பட்ட போது சிறையில் மாற்று திறனாளிகளுக்கு உரிய ஊட்டச்சத்து உணவு கிடைப்பதில்லை என்பது அறிந்து அதனை உச்சநீதிமன்றத்தில் வழக்காக ஆக்கி வாதிட்டார். அதன் தொடர்ச்சியாக கடந்த வாரம் உச்சநீதிமன்றம் நீதிபதி மகாதேவன் அமர்வு கடந்த ஜுலை 15 ஆம் தேதி தமிழக அரசு, இந்தியா முழுவதும் உள்ள சிறைகளில் மாற்று திறனாளிகளுக்கு உரிய ஊட்டச்சத்து உணவு வழங்க வேண்டும் என உத்தரவிட்டது. மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய வசதிகள் தர உத்தரவிட்டது. இந்த தீர்ப்பு மாற்றுத்திறனாளிகள் உரிமையில் ஒரு முக்கிய தீர்ப்பாகும். தனது சித்தப்பா தண்டபாணி என்பவர் நடத்தும் தேன் மலர் மேல்நிலைப் பள்ளியில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தை அகற்ற வழக்கு தாக்கல் செய்து வெற்றி பெற்றுள்ளார். இந்த பகையின் காரணமாக இன்று அவர் சமூக விரோதிகளால் கொல்லப் பட்டுள்ளார். சட்டத்தின் துணை கொண்டு அற வழியில் போராடிய மாற்றுத் திறனாளி வழக்குரைஞர் வீழ்த்தப் பட்டுள்ளார். முருகானந்தம் படுகொலை மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமை செயல்பாட்டில் நிகழ்ந்த தாக்குதல் ஆகும். முருகானந்தம் ஒரு மனித உரிமை காப்பாளர் ஆவார். தமிழக அரசு இந்த படுகொலைக்கு காரணமான அனைத்து சக்திகளையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். உரிய நீதியை முருகானந்தம் அவர்களின் கொலையில் நிலைநிறுத்த வேண்டும்.




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் இன்று (27.07.2025) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி அணையிலிருந்து பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில் தண்ணீர் திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே,இ.ஆ.ப. அவர்கள், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.க.ஈஸ்வரசாமி அவர்கள், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் திரு.இல.பத்மநாபன், கண்காணிப்பு பொறியாளர் (நீர்வளத்துறை) திரு.என.கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.

# மதுரை மாவட்டம் அவைக் குழு ஆய்வுப் பயணம்; கலெக்டர் தகவல்

மதுரை மாவட்டம் அவைக் குழு – (20242026) 29.07.2025 அன்று மதுரை மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொள்ள உள்ளது.

அவைக்குழு–(20242026) நாளை(29.07.2025) மதுரை மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொள்ள உள்ளது. குழு தலைவர் / சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.பரந்தாமன் அவர்கள் (எழும்பூர் (தனி)) தலைமையில் அவைக் குழு உறுப்பினர்கள் மதுரை மாவட்டத்தில் திருப்பரங்குன்றம் மற்றும் உசிலம்பட்டி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி அலுவலக கட்டடங்களை அவைக் குழு ஆய்வு செய்து பிற்பகல் 3.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பல்வேறு துறை அலுவலர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதில் அவைக் குழு (20242026) ஆம் ஆண்டிற்கான குழு தலைவர் / சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.பரந்தாமன் (எழும்பூர் (தனி) அவர்கள் தலைமையில், குழு உறுப்பினர்களாக திருமதி V.அமலு (குடியாத்தம் (தனி) அவர்கள், திரு.க.கணபதி(மதுரவாயல்)அவர்கள்,திரு.இ.கருணாநிதி (பல்லாவரம்) அவர்கள், திரு.ஜெ.கருணாநிதி (தியாகராய நகர்) அவர்கள், திரு.பெ.சு.தி.சரவணன் (கலசபாக்கம்) க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்) அவர்கள், நிவேதா எம்.முருகன் (பூம்புகார்) அவர்கள், திரு.கே.பொன்னுசாமி (சேந்தமங்கலம் (தனி) அவர்கள், செ.முருகேசன் (பரமக்குடி (தனி) அவர்கள், பெ.ராமலிங்கம் (நாமக்கல்) அவர்கள், திரு.மா.செந்தில்குமார் (கள்ளக்குறிச்சி (தனி) அவர்கள், திரு.T.M.தமிழ்செல்வம் (ஊத்தங்கரை(தனி) அவர்கள், அ.நல்லதம்பி (கங்கவல்லி), அ.பண்ணாரி (பவானிசாகர்) அவர்கள், திரு.M.ராஜமு த்து (வீரபாண்டி) அவர்கள், பொன்.ஜெயசீலன் (கூடலூர்) அவர்கள், .ராஜகுமார் (மயிலாடுதுறை) ஆகியோர் பங்கேற்க உள்ளார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்கள்.

# செம்மார் ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு




சென்னையில்மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைசார்பில்.விழுப்புரம்அருகேதிருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியம் செம்மார் ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை திறந்து வைத்ததை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர்.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில்திருக்கோவிலூர்சட்டமன்றஉறுப்பினர். க.பொன்முடி, செம்மார் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை ரிப்பன்வெட்டிபொதுமக்களின்பயன்பாட்டிற்குகொண்டு வந்தார்.உடன்செ ம்மார் ஊராட்சி மன்ற தலைவர். ஷீபா ராணி ஏழுமலை, செம்மார். ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்.கு.ஓம் சிவ சக்திவேல், மாவட்ட ஊராட்சி குழு மாவட்ட பிவிஆர். விஸ்வநாதன், மாவட்ட சுகாதார அலுவலர். செந்தில்குமார், வட்டார மருத்துவ அலுவலர். காயத்ரி,பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் (29.7.2025)

**மேஷம்:** புதிய தொடர்புகள் உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். பணியில் பாராட்டுகள் கிடைக்கும்.

**துலாம்:** உத்தியோகத்தில் முன்னேற்றம். உள்சஞ்சாரம் அதிகம் இருக்கும். சகோதரர் உதவியால் நன்மை ஏற்படும்.

**ரிஷபம்:** அதிக உணர்ச்சிபூர்வமான நாள். உடல்நலத்தைக் கவனிக்கவும். தவறான முடிவுகள் தவிர்க்க வேண்டியது அவசியம்.

**விருச்சிகம்:** திடீர் செலவுகள் வரக்கூடும். தொழில் அல்லது வியாபாரத்தில் கவனம் தேவை. தாமதமாக செயல்பட வேண்டாம்.

**மிதுனம்:** தினம் சாதகமாக இருக்கும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். வெளியூர் பயணம் சாத்தியம்.

**தனுசு:** விழாக்கள், நிகழ்வுகளில் பங்கேற்பீர்கள். குடும்ப உறவுகளில் மகிழ்ச்சி அதிகரிக்கும். செல்வாக்கு உயரும்.

**கடகம்:** நட்பு வட்டத்தில் சிக்கல்கள் ஏற்படக்கூடும். செலவுகள் அதிகரிக்கலாம். பொறுமையாக செயல்படுங்கள்.

**மகரம்:** அதிக உழைப்பால் வெற்றி. சிந்தித்து செயல்படுவது அவசியம். அன்பான வார்த்தைகள் பெரிய விஷயங்களை சாதிக்கச் செய்யும்.

**சிம்மம்:** பழைய கடன்கள் அடைப்பு வாய்ப்பு. தாமதம் ஆன வேலைகள் நிறைவேறும். குடும்பத்தில் சந்தோஷம். அதிர்ஷ்ட எண்: 1

**கும்பம்:** நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். மனநிலை சமநிலையாக இருக்கும். புதிய ஆர்வங்கள் பிறக்கும்.

**கன்னி:** வேலை தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கும் நாள். மற்றவர்களை நம்பி தவறு செய்ய வேண்டாம்.


**மீனம்:** புதிய திட்டங்கள் தொடங்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும். வருமானம் மேம்படும்.

# குன்னூரில் இருந்து காட்சி முனைகளுக்கு செல்லும் சாலையில் கடும் வாகன நெரிசல்



நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் நிறைவடைந்து ஒரு மாதம் ஆகிவிட்டது கூட சுற்றுலா பயணிகள் வரத்து குறைவதில்லை. இதில் கடந்த ஜூன் மாதம் முதல் வாரத்தில் இருந்து இதுவரை அவ்வப்போது பரவலான மற்றும் கனமழை பெய்து வந்தாலும் வார விடுமுறை நாட்களில் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் தொடர்மழையால் ஊட்டியில் உள்ள சுற்றுலாத்தலங்கள் தற்காலிகமாக அவ்வப்போது மூடப்பட்டு வரும் நிலையில், பெரும்பாலான சுற்றுலா பயணிகள் குன்னூருக்கு படையெடுக்க துவங்கியுள்ளனர். இதனால் டால்பின் நோஸ், லேம்ஸ் ராக் காட்சி முனைகளுக்கு நேற்று காலையிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்தது. இந்த வழியாக வரும் சுற்றுலா பயணிகள் அங்குள்ள தேயிலைத் தோட்டங்களில் இறங்கி அதனை பார்வையிட்டு, புகைப்படமும் எடுத்து செல்கின்றனர். தற்போது கர்நாடகா, தெலுங்கானா, கேரள மாநிலங்களை சேர்ந்த சுற்றுலா பயணிகள் தான் அதிக அளவில் வர துவங்கியுள்ளனர். இதனால் இந்த சாலையில் அவ்வப்போது கடும் வாகன நெரிசல் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. மழைக் காலம் என்றாலும் சுற்றுலா பயணிகள் வருகையால் சுற்றுலாவை நம்பி உள்ள வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# சென்னை பைல்ஸ் முதல் பக்கம் படத்தின் 2வது பாடலை வெளியிட்ட வெங்கட் பிரபு




தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் நடிகர்களில் ஒருவர் வெற்றி. இவரது நடிப்பில் சமீபத்தில் 'ராஜபுத்திரன்' படம் வெளியானது. இதில் நடிகர் பிரபு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது. அதனை தொடர்ந்து நடிகர் வெற்றி தற்போது 'சென்னை பைல்ஸ் முதல்பக்கம்' என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தினை சின்னதம்பி புரொடக்ஷன்ஸ்சார்பில்இயக்குனர்அனீஷ்அஷ்ரப் இயக்கியுள்ளார். இதில் கதாநாயகியாக ஷில்பா மஞ்சுநாத் நடித்துள்ளார். மேலும், தம்பி ராமய்யா, ரெடின் கிங்ஸ்லி உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

'சென்னை பைல்ஸ் முதல்பக்கம்' படம் வரும் ஆகஸ்ட் 1ம் தேதி வெளியாக உள்ளது. இந்த திரைப்படத்திற்கு ஏ.ஜி.ஆர் இசையமைத்திருக்கிறார். சாண்டி ரவிச்சந்திரன் இணை தயாரிப்பாளராக இருக்கும் இந்த திரைப்படத்தை மீடியா மைண்ட்ஸ் நிறுவனம் வழங்குகிறது. நடிகர் வெற்றி முதன்மை கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் 'சென்னை பைல்ஸ் முதல்பக்கம்' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது. இந்நிலையில் வெற்றி நடித்துள்ள 'சென்னை பைல்ஸ் முதல்பக்கம்' படத்தின் 2வது பாடலை இயக்குனர்வெங்கட் பிரபு வெளியிட்டார். 'வாடாவாடாமாமா' எந்த்தொடங்கும்பாடலை ஏ.ஜி.ஆர், பிரேம்ஜி இணைந்து பாடியுள்ளனர்.

# "தலைவன் தலைவி" படத்தின் அதிகாரப்பூர்வ வசூல்

இயக்குனர் பாண்டிராஜ் இயக்கத்தில் நடிகர் விஜய் சேதுபதி, நடிகை நித்யா மேனன் நடிப்பில் நேற்று திரையரங்குகளில்வெளியானபடம் 'தலைவன்தலைவி'. இதுவிஜய்சேதுபதியின்52வதுபடமாகும். இப்படத்துக்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். இந்த படத்திலிருந்து 'பொட்டல முட்டாயே' பாடல் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

விஜய் சேதுபதி பாண்டிராஜ் இருவரும் முதல் முறையாக இணைந்துள்ளதால் இந்த படத்துக்கு ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. அதற்கேற்ப 1,000க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியான இப்படம் நல்ல விமர்சனங்களை பெற்று வருகிறது. கணவன் மனைவி உறவுச் சிக்கல்களை மையமாகக் கொண்டு உருவான இத்திரைப்படம் ரசிகர்களிடம் வரவேற்பைப் பெற்றுள்ளது.தமிழில் கிடைத்த வரவேற்பால் இப்படத்தை ஆகஸ்ட் 1ம் தேதி தெலுங்கில் வெளியிட முடிவுசெய்துள்ளனர்.

இந்நிலையில், 'தலைவன் தலைவி' திரைப்படம் முதல் மூன்று நாள்களில் ரூ. 25 கோடிக்கும் அதிகமாக வசூலித்துள்ளதாகத் தயாரிப்பு நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

# "மதராஸி" படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் அப்டேட்




தமிழ் சினிமாவில் அனைவராலும் கொண்டாடப்படும் நடிகர் சிவகார்த்திகேயன். சமீபத்தில் இவரது நடிப்பில் வெளியான அமரன் படம் மிகப்பெரிய வெற்றிப்படமாக அமைந்தது. பிரபல இயக்குனர்ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் தனது 23வது படமான 'மதராஸி' திரைப்படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில் சிவகார்த்திகேயனுடன் இணைந்து ருக்மினி வசந்த், விக்ராந்த், வித்யூத் ஜம்வால், பிஜு மேனன், டான்சிங் ரோஸ் சபீர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்தை ஸ்ரீ லட்சுமி மூவிஸ் நிறுவனம் தயாரிக்க அனிருத் இதற்கு இசை அமைத்திருக்கிறார்.

இத்திரைப்படத்தின் ஆடியோ உரிமையை ஜங்கிலி மியூசிக் நிறுவனம் பெற்றுள்ளது. 'மதராஸி' திரைப்படம் வருகிற செப்டம்பர் 5ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு அறிவித்துதது. இந்த தேதியில்தான் கடந்த ஆண்டு விஜய் நடித்த 'தி கோட்' திரைப்படம் வெளியானது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், 'மதராஸி' படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் புரோமோ நாளை மாலை 5 மணிக்கு வெளியாக இருப்பதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

# காலில் ஏற்பட்டுள்ள காயம் குறித்து உருக்கமாக பதிவிட்ட ரிஷப் பண்ட்.. வைரல்





சுப்மன்கில்தலைமையிலானஇந்தியகிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 3 போட்டிகளின் முடிவில் இங்கிலாந்து தொடரில் 21 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 4வது போட்டி மான்செஸ்டரில் நடைபெற்றது. இந்த போட்டி டிராவில் முடிந்தது. இதனால் இப்போதும் 5 போட்டிகள் கொண்ட இந்த தொடரில் இங்கிலாந்து அணி 21 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இவ்விரு அணிகள் இடையிலான 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் வருகிற 31ந் தேதி தொடங்குகிறது.

முன்னதாக மான்செஸ்டரில் நடைபெற்ற 4வது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தின்போது இந்திய விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பாதியில் வெளியேறினார். ஸ்கேன் செய்து பார்த்ததில் அவருக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் 2வது நாளில் இந்திய அணி விக்கெட்டுகளை இழந்தபோது வலியை பொருட்படுத்தாமல் மீண்டும் களத்திற்கு வந்து அரைசதம் அடித்து அசத்தினார். இதனால் ரிஷப் பண்டை பல முன்னாள் வீரர்கள் பாராட்டினர்.

இருப்பினும் அவரால் இங்கிலாந்துக்கு 5 வது போட்டியில் விளையாட முடியாது. அதன் காரணமாக அந்த போட்டியிலிருந்து அவர் விலகியுள்ளார். இவருக்கு பதிலாக தமிழக வீரர் ஜெகதீசன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் காலில் ஏற்பட்டுள்ள காயம் குறித்து ரிஷப் பண்ட் தனது எக்ஸ் பக்கத்தில் உருக்கமாக பதிவிட்டுள்ளார். அதில், "எனக்கு கிடைத்த அன்பையும், வாழ்த்துகளையும் நினைத்து மகிழ்ச்சியாக உள்ளது. இது ஒரு உண்மையான பலத்தை அளித்துள்ளது. தற்போது எனது காலில் ஏற்பட்டுள்ள எலும்பு முறிவுக்காக ஓய்வில் இருக்கிறேன். என்னுடைய காயம் குணமடைந்து வருகிறது. இருந்தாலும் பொறுமையுடன் இருந்து முழு உடற்தகுதி பெறும் வரை காத்திருப்பேன். நாட்டிற்காக விளையாடுவது எப்போதும் என் வாழ்க்கையின் பெருமைமிக்க தருணமாகும். மீண்டும் களத்திற்கு வர காத்திருக்க முடியவில்லை" என்று பதிவிட்டுள்ளார். இந்த பதிவு தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# டிராவில் முடிந்த 4வது டெஸ்ட்... மைக்கேல் வாகனை வம்பிழுத்த வாசிம் ஜாபர்

சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 4 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடரில் இங்கிலாந்து அணி 21 என்ற கணக்கில் (4வது போட்டி டிரா) முன்னிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் வருகிற 31ந் தேதி தொடங்குகிறது.

இதில் இவ்விரு அணிகள் இடையிலான 4வது போட்டி மான்செஸ்டரில் நடைபெற்றது. அதில் முதலில் ஆடிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 358 ரன்னில் ஆல்அவுட் ஆனது. பின்னர் முதல் இன்னிங்சை ஆடிய இங்கிலாந்து அணி 669 ரன்கள் குவித்தது. ஜோ ரூட் (150 ரன்), கேப்டன் பென் ஸ்டோக்ஸ் (141 ரன்) சதம் அடித்தனர். 311 ரன் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 143 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 425 ரன்கள் எடுத்து 114 ரன்கள் முன்னிலை பெற்றிருந்தபோது ஆட்டம் டிராவில் முடித்து கொள்ளப்பட்டது. வாஷிங்டன் சுந்தர் 101 ரன்களுடனும், ரவீந்திர ஜடேஜா 107 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். சுப்மன் கில் 103 ரன்களில் ஆட்டமிழந்தார். இங்கிலாந்து தரப்பில் கிறிஸ் வோக்ஸ் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். முன்னதாக இந்த போட்டி டிராவில் முடிவதற்கு 5 ஓவருக்கு முன்பாக இங்கிலாந்து வீரர்கள் ஆட்டத்தை டிராவில் முடிக்க முன்வந்தனர். ஆனால் இந்திய தரப்பில் ரவீந்திர ஜடேஜா, வாஷிங்டன் சுந்தர் சதம் அடிக்கும் வாய்ப்புக்காக டிராவை தள்ளி போட்டனர். இதனால் இரு அணியினருக்கும் இடையே சிறிய வாக்குவாதம் ஏற்பட்டது. இது பலரது மத்தியில் பேசு பொருளானது. முன்னதாக இந்திய அணி இந்த தொடரில் 13 என்ற கணக்கில் தோல்வியை சந்திக்கும் என்று இங்கிலாந்து முன்னாள் வீரர் மைக்கேல் வாகன் கணித்திருந்தார். அந்த சூழலில் 4வது போட்டி தற்போது டிராவில் முடிவடைந்துள்ளதால் கடைசி போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றால் மட்டுமே வாகனின் கணிப்பு நிறைவேறும். ஒருவேளை இந்தியா வெற்றி பெற்றாலோ அல்லது டிராவில் முடிந்தாலோ அவரது கணிப்பு தவறாகி விடும். இந்நிலையில் மைக்கேல் வாகனை இந்திய முன்னாள் வீரரான வாசிம் ஜாபர் எக்ஸ் பக்கத்தில் வம்பிழுத்துள்ளார். அதில் 4வது டெஸ்ட் முடிந்ததும் வாசிம் ஜாபர் தனது எக்ஸ் பக்கத்தில், "ஹாய் மைக்கேல், நீங்கள் நலமாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன்" என்று பதிவிட்டார். அதற்கு பதிலளித்த மைக்கேல் வாகன், "மாலை வணக்கம் வாசிம்.. ஓவலில் (5வது போட்டி) சந்திப்போம்.. இப்போதும் என்னுடைய கணிப்பு (31) நன்றாக இருக்கிறது" என்று பதில் கொடுத்தார். மைக்கேல் வாகனின் இந்த பதிவிற்கு ஜாபர், "31 என்ற கணக்கில் வெற்றி பெறுவீர்களா அல்லது ஸ்டோக்சைப் போல நீங்களும் ஓவல் டெஸ்ட் முடிவதற்குள் கைகுலுக்கத் தயாராக இருக்கிறீர்களா என்பதற்கு காலம்தான் பதில் சொல்லும், மைக்கேல்" என்று கிண்டலாக பதிலளித்தார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.